-

**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 292/2012**

**Witness PW 3**

| பெயர் | அஞ்சலை | தொழில் | |
|---|---|---|---|
| க/பெ | கிருஷ்ணன் | வயது | |
| ஊர் | | தேதி | 16.10.2025 |
| மாவட்டம்; | | | |

இன்று (16.10.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரி . நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரி . நான் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் எனது மண்ணுக்காக தாக்கல் செய்துள்ளேன் இந்த வழக்கில் உள்ள விவரங்கள் எனக்கு முழுமையாக தெரியும் . பார்வதி என்பவர் எனது மகள். ஆறுமுகம் என்பவர் எனது கணவர் . நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தானது எந்த முறையில் மாமனாருக்கு உரிமையானது என்ற விவரம்எனக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியும் . அந்த நிலமானது அரசாங்கம் கொடுத்தது . வழக்கு சொத்தில் யார் குடியிருக்கிறார்கள் என்றால் நான் தான் குடியிருந்து வருகிறேன் . நான் தாக்கல் செய்த வழக்குரையில் நான் குடியிருந்து வருவதாக சொல்லவில்லை என்றாலும் தற்பொழுது இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல . வழக்கு சொத்தை அடமானம் வைத்திருந்ததை நான் பைசல் செய்தேனா என்றால் ஆமாம் நான் தான் பைசல் செய்தேன். அடமானம் வைத்த ரூ. 1500 யை நான் தான் வாங்கினேன் என்றால் இல்லை எனது மாமனார் தான் வாங்கினார் . அவர் குடும்பத்திற்காக செலவு செய்தார் . அடமான கடனை பைசல் செய்ததற்கான ஆவணம் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது மாமனார் தான் பைசல் செய்தார் . வழக்கு சொத்து சம்மந்தமாக இருசன் என்பவர் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்த விவரம்எனக்கு தெரியுமா என்றால் எனது மாமனார் எதுவும் எழுதி வைக்கவில்லை நானும் எனது மகனும் கரும்பு வெட்ட சென்றிருந்த போது எனது மகன் கீழே விழுந்து உடல் நிலை சரியில்லாமல்

ஆகிவிட்டடார்அந்த நேரத்தில் புட்லாய் என்பவர் சொத்தினை விற்பனை செய்யபோவதாக கூறினார் நான் எனது மகனுக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறிவிட்டு சென்றுவிட்டேன். பின்பு புட்லாய் என்பவர் சொத்தினை விற்பனை செய்துவிட்டார் . எனது ககணவர் இறந்துவிட்டதால் பிழைப்புக்காக வேலைக்கு சென்றேனா எ ன்றால் எனது கணவர் மற்றும் மாமனார்இறந்துவிட்டதால் நான் வேலைக்கு சென்றேன் . இருசன் என்பவரது மனைவி தான் புட்லாய் என்றால் இல்லை . எனது கணவர் தான் இருசன் . எனக்கும் இருசன் என்பவருக்கும் திருமணம் நடந்ததற்கான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. எனது மகன் முருகன் என்பவர் பனங்குப்பம் என்ற ஊரில் தான் பிறந்தார் என்றால் சரி. அதற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஆவணங்கள் உள்ளது. இருசன் என்பவர் எனது கணவர் என்பதற்காக குடும்ப அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டையை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அனால் என்னிடம் உள்ளது . வழக்கு சொத்தை எத்தனை வருடம் கழித்து மீட்டார்கள் என்றால் 3 மாதத்திலேயே மீட்டுவிட்டனர்.

**மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram